**ஜூன் 2**

**மனன வசனம்**

**உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக் கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். தானியேல் 12:1.**

**ஆராய்ச்சிக்கு**

*வெளி 13:1-12; வெளி 14:9-11; வெளி 16:2; வெளி 19:20: வெளி 20:4; எரே 51:6,7,53,57; வெளி 18:1-4.*

ஜூன் 2 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 10

# அமெரிக்காவும் பாபிலோனும்



வலுசர்ப்பமாகிய சாத்தானும், பூமியின் இரண்டு வல்லமைகளும் சேர்ந்து போலித் திரித்துவமாக் காட்சி யளித்து, தேவனுடைய பிள்ளைகளுக்கு உபத்திரவம் கொடுக்குமென சென்ற வாரம் பார்த்தோம்.

அந்த வல்லமைகளில் ஒன்றான சமுத்திர மிருக மானது சிறுத்தை- கரடி-சிங்கம் ஆகியவை சேர்ந்த ஒரு கலவைப்போலத் தோன்றியது. வெளி 13:2. இந்த உருவகம் தானி 7:4-6 இலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. தானி 7இல் சிங்கமாகிய பாபிலோன், கரடியாகிய மேதிய-பெர்சியா, சிறுத்தையாகிய கிரேக்கம் ஆகிய ராஜ்யங்களுக்குபின் பூமியின் கடைசி வல்லமையான ரோம் எழுந்தது. (பாடம் 6ஐப் பார்க்கவும்). முதலில் அஞ்ஞான ரோமாக அரசாள ஆரம்பித்து, பிறகு போப்புமார்க்க ரோமாக மாறியது. அதைத்தான் நான்காம் மிருகத்திலிருந்து எழுந்த சின்ன கொம்பின் வல்லமை என்று தானி 7:7,8: 19-21; 23-25 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. இந்த வசனங்கள் சொல் வதுபோல, போப்புமார்க்க வல்லமையின் பல குணங் கள் சமுத்திரத்திலிருந்து எழுந்த மிருகத்திடமும் காணப் படுவதாக வெளி 13:1-10இல் காண்கிறோம். எனவே, வெளி 13இல் சொல்லப்படும் கடைசிக்கால நிகழ்வு களில், உபத்திரவப்படுத்தும் வல்லமைகளில் முக்கிய மானதாக ரோம் இருக்குமென வேத அறிஞர்கள் கருது கிறார்கள்.

ரோம் மட்டுமல்ல, வேறொரு வல்லமையும் காட்டப்படுகிறது. வெளி13இல் சொல்லப்படும் நிகழ்வுகள், வல்லமைகள்பற்றி நாம் அதிகமாகப் பார்ப்போம். 'அந்தநிகழ்வுகளின் பொருள் என்னவாக இருக்கும்? அவற்றை எதிர்கொள்ள எவ்வாறு ஆயத்த மாக இருக்கலாம்?' என்று சிந்திப்போம்.

*2018, ஜூன் 9 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

**ஞாயிறு, ஜூன் 3**

## சாவுக்கேதுவான காயம் சொஸ்தமாக்கப்பட்டது

**போப்புமார்க்கம் முற்காலத்தில் என்ன செய்தது, இனி என்ன செய்யும் என்பதுபற்றி வெள 13:1–10 சொல்வதற்கான காரணம் என்ன? அதன் பங்கு எவ்வளவு வலியுறுத்தப்படுகிறது? கடைசிக்கால நிகழ்வுகளின் அடிப்படையில் இதை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?**

எல்லாச் சபைகளிலும் தேவனுக்கு உண்மையானவர்கள் இருக்கிறார்கள். ஆனாலும் இந்த அமைப்பு வரலாற்றில் முன்பு செய்ததையும், கடைசிக்கால நிகழ்வுகளில் செய்யப்போவதையும் வேதாகமம் சுட்டிக்காட்டுகிறது.

**வெளி 13:3 சொல்கிற சம்பவம் என்ன? ரோமின் முக்கியத்துவம் இங்கு எவ்வாறு சுட்டிக்காட்டப்படுகிறது?**

பல நூற்றாண்டுகளாக மத அதிகாரம் மிகுந்த ஒரு சபையாக ரோமச் சபை விளங்கியது; மேற்கத்திய நாடுகளின் அரசியல் மையமாகவும் பலவிதங்களில் திகழ்ந்தது. அதன் வல்லமைக்கு புனித ரோம சாம்ராஜ்ய நான்காம் ஹென்றி மன்னனின் அனுபவம் ஓர் எடுத்துக்காட்டு. போப் ஏழாம் கிரிகரியைக் கோபப் படுத்தும் விதத்தில் மன்னன் நடந்துகொண்டான். எனவே போப்பிடம் மன்னிப்புக் கேட்க போப்பின் அரண்மனைக்கு வந்தான். ரோமப் பேரரசனை அரண்மனையின் வெளிமுற்றத்தில், கடுங்குளிரில், மூன்று நாட்களுக்கு போப் காத்திருக்க வைக்கிறார்; அதன்பிறகு தன்னைப் பார்க்க அனுமதிக்கிறார். இந்த வெற்றியால் மார்தட்டிய ஏழாம் கிரிகரி, ராஜாக்களின் அகந்தையைத் தாழ்த்து வதுதான் தன் வேலையெனப் புகழ்ந்துகொண்டார்.

ஆனாலும், பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீர்திருத்தம், ஆன்மிக எழுப்புதல், பிரெஞ்சுப் புரட்சி ஆகியவற்றின் தாக்கத்தால், ரோமின் அரசியல் ஆதிக்கமும் மத ஆதிக்கமும் ஆட்டம்கண்டன. போப் ஆறாம் பயஸ் என்பவரை பிரெஞ்சு படையினர் 1798இல் கைதுசெய்தனர்; அவர் நாடு கடத்தப்பட்ட நிலையில் 1799இல் மரித்துப்போனார்.

‘சாவுக்கேதுவான காயம்’ சொஸ்தமானதாக வெளி 13 கூறுகிறது. வெளி 13:3. ஏழாம் கிரிகரியின் நாட்களில் இருந்ததுபோன்ற அரசியல் வல்லமை இன்று ரோமுக்கு இல்லாமல் இருக்கலாம்; ஆனாலும், சமீபத்திய பிரபல போப்பு மார்களின் முயற்சியால் அது இன்னமும் அரசியல்-மத ரீதியில் செல்வாக்குமிக்க ஒரு சக்தியாகத்தான் திகழ்கிறது. உதாரணமாக, 2015-ல் போப் பிரான்சிஸ், வரலாற்றிலேயே முதன்முறையாக அமெரிக்க காங்கிரஸின் இரண்டு அவைகளி லும் பேசினார். தீர்க்கதரிசனத்தின்படி, இந்தச் செல்வாக்கு வரவர வளர்ந்து கொண்டுதான் இருக்கும்.

நாம் என்ன செய்தியைப் பிரசங்கிக்க அழைக்கப்பட்டுள்ளோமோ அதை எவ்வாறு உண்மையுடன் பிரசங்கிக்கலாம்? அதே நேரம் மற்றவர்களை அதிகம் புண்படுத்திவிடாமல் எவ்வாறு அதைச் சொல்லலாம்? தற்கால சத்தியத்தை நாம் அறிவிக்கும்போது, ‘மதசகிப்புத்தன்மை’ அடிப்படையில் அடிபணிந்துவிடாமல் இருக்க என்ன செய்யலாம்?

## தீர்க்கதரிசனத்தில் அமெரிக்கா

வெளி 13 சொல்கிறபடி ரோம் எவ்வாறு இன்றோ, எதிர்காலத்திலோ அப்படிப்பட்ட செல்வாக்கைச் செலுத்தமுடியுமென மக்கள் கேட்கிறார்கள். படைகளுக்குக் கட்டளையிடுகிற அதிகாரமும் ஒரு சமயத்தில் அதற்கு இருந்தது; ஆனால், இனி எப்படி சாத்தியம்? வெளி 13இல் இதற்கான பதிலும் இருக்கிறது.

**இந்த வல்லமையைக் கண்டுகொள்ள வெளி 13:11,12 சுட்டிக்காட்டுகிற அடையாளங்கள் யாவை?**

வெளி 13:11,12இல் சொல்லப்படும் மிருகத்திற்கு முன்னால் வந்த மிருகத்திற்கு நாற்பத்திரண்டு மாதங்கள் அதிகாரம் கொடுக்கப்பட்டது. வெளி 13:5. ரோம்தான் அந்த மிருகம் என்று புரொட்டஸ்டண்டுகள் அறிவார்கள். இந்த நாற்பத்திரண்டு மாதங்களும், தானி 7:25இல் உள்ள 'ஒருகாலமும் காலங்களும் அரைக் காலமும்', வெளி 12:14இல் உள்ள மூன்றரை வருடமும், வெளி 12:6இல் உள்ள 1260 தீர்க்கதரிசன நாட்களும் ஒரே காலக்கட்டம்தான். இந்தக் காலக்கட்டத்தில்தான் ரோம வல்லமை தன் எதிரிகளைக் கொடுமைப்படுத்தியது. இந்தத் தீர்க்கதரிசனக் காலக்கட்டம் (ஒரு நாள் = ஒரு வருடம் என்கிற நியதியின்படி) போப்பு மேலாதிக்கம் செலுத்த ஆரம்பித்த கி.பி. 538ம் வருடத்தில் துவங்கி 1798இல் முடிவடைந்தது. 1798இல் போப் கைது செய்யப்பட்டார். அப்போதுதான் போப்புமார்க்க வல்லமைக்கு சாவுக்கேதுவான காயம் உண் டானது.

'நாற்பத்திரெண்டு மாதங்கள்' முடிவடைந்த 1798 வாக்கில் இன்னொரு வல்லமை தோன்றியது. வெளி 13:11. இதற்கு முந்தின வல்லமைகள் எல்லாம் தண்ணீரிலிருந்து எழும்பின. தானி 7:2,3. அது மக்கள் கூட்டத்தைச் சுட்டிக்காட்டுகிறது. 'அந்த வேசி உட் கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே; அவைகள் ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம்.' வெளி 17:15. ஆனால், அடுத்த மிருகம் பூமியிலிருந்து எழும்புகிறது.

இதுபோன்ற காரணங்களை வைத்து இந்த வல்லமை அமெரிக்காதான் என்கிற முடிவுக்கு வரமுடிகிறது. ஏனென்றால், மக்கள் சஞ்சாரமற்ற ஒரு பகுதியிலிருந்து அமெரிக்கா எழும்பியது; பெரிய சாம்ராஜ்யங்களை எதிர்த்து எழும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை.

''புதிய உலகின் எந்தத் தேசம் 1798ல் அதிகாரத்திற்கு வந்தது? பெலத்தை அளிக்கக்கூடியதாகக் காட்சியளித்தது? உலகத்தின் கவனத்தை ஈர்த்தது? இந்த அடையாளத்தை வைத்துப் பார்க்கும் போது, கேள்விக்கிடமின்றி ஒன்று புலனாகிறது. ஒரே நாடுதான் இந்தத் தீர்க்கதரிசனத்திற்குப் பொருந்துகிறது; அது அமெரிக்க ஐக்கிய நாடுகள்தான்.' - *EGW, GC, p 440.*

ஆட்டுக்குட்டிக்கு ஒப்பான இரண்டு கொம்புகள் இருப்பதாக இந்த வல்லமை சித்தரிக்கப்படுவதால், இது முதலில் சாதுவானதுபோல இருந்தது. பின்னர் 'வலுசர்ப்பத்தைப் போலப்' பேசுகிறது. வெளி 13:11. எனவே, முந்தின மிருகத்தின் காலக்கட்டத்தில் நடைபெற்ற உபத்திரவத்தை இது சுட்டிக்காட்டுகிறது. எனவே, தீர்க்கதரிசனம் முன்னுரைப்பதுபோல ரோம் எவ்வாறு ஆதிக்கம் இனி செலுத்தமுடியும் என்கிற கேள்விக்கு வெளி 13:11-17 பதிலளிக்கிறது. அமெரிக்காவின் பெலத்தோடு அது அதிகாரம் செலுத்தும்.

செவ்வாய், ஜூன் 5

## தொழுகை சம்பந்தப்பட்ட பிரச்சனை

மக்கள் விக்கிரகவழிபாட்டிலும், பொய்த்தொழுகையிலும் விழுவதையும், தேவன் அவர்களை எச்சரிப்பதையும் வேத வரலாறு முழுவதிலும் காணலாம். மத் 4:8-10. இறுதி நாட்களில், மீண்டும் தொழுகை சம்பந்தமான பிரச்சனை எழும்பப் போகிறது. வெளி 13. அப்போதும், தாங்கள் யாரைத் தொழவேண்டுமென மக்கள் ஒரு தீர்மானத்திற்கு வந்தாகவேண்டும். யோசுவா 24:15.

'தானியேலும் கடைசிக்காலமும்' என்கிற 2ம் வாரப் பாடத்தில், மூன்று எபிரெய வாலிபர்கள்பற்றிய ஒரு சம்பவத்தைப் படித்தோம்; 'பொற்சிலையைப் பணிந்துகொள்ள' அந்த வாலிபர்களுக்குக் கட்டளையிட்டார்கள். தானி 3:5. கடைசிக்காலங்களில் தேவபிள்ளைகளுக்கு உண்டாகும் உபத்திரவம்பற்றி விளக்கும்போது, தானி 3இன் வார்த்தைகளை வெளி 13 பயன்படுத்துவதாகவும் பார்த்தோம். அதனால்தான், தானி 3இல் நிகழ்ந்த சம்பவமானது கடைசி நாட்களில் நிகழும் சம்பவங்களுக்கு முன்னடையாளமாக இருப்பதாகக் கருதப்படுகிறது. அங்கு பொற்சிலைபோல, வெளி 13இல் மிருக வல்லமைகள் உள்ளன. பொற்சிலையை வணங்காதவர்கள் எரிகிற சூளைக்குள் எறியப்படுவார்களெனச் சொல்லப்பட்டது. அதுபோல, 'மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்ய' கட்டளையிடப்படுகிறது. வெளி 13:15.

**தொழுகை சம்பந்தப்பட்ட பிரச்சனை எவ்வளவு பெரிய விஷயமாக உருவாகுமென வெளி 14:9–11; 16:2; 19:20; 20:4 கூறுகின்றன?**

எப்போதுமே பொய்த்தொழுகையின் தலைநகரம் பாபிலோன்தான். 'நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்' என்று லூசிபர் சொன்னதுபோல (ஏசாயா 14:14), பாபேல் கோபுரத்தைக் கட்டினவர்களும் விரும்பினார்கள்; இன்னொரு ஜலப்பிரளயம் வந்தால் அதன்மூலம் தங்களைக் காத்துக்கொள்ள பிரயாசப்பட்டார்கள். இன்னொரு முறை தாம் ஜலப்பிரளயத்தை வரச்செய்வதில்லை என்கிற தேவனுடைய வாக்குறுதியை நம்ப அவர்கள் மறுத்தார்கள்.

புது-பாபிலோனிய சாம்ராஜ்யமும் இதுபோல மனிதர்களின் கைக்கிரியைகளைதாம் மேன்மைப்படுத்தியது; 'நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா?' என்று பெருமைபாராட்டினார் நேபுகாத்நேச்சார். தானி 4:30. ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொடுத்த விருந்தில், சாலோமோனின் தேவாலயத்திலிருந்து கொண்டுவந்திருந்த பொற்பாத்திரங்களை எடுத்து, 'அவர்கள் திராட்சரசம் குடித்து, பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தார்கள்.' தானி 5:3,4. தேவாலயத்தின் பாத்திரங்களில் போதை பானங்களை ஊற்றினார்கள்; அதிலிருந்து பருகின அனைவருமே புத்திமயங்கிபோனார்கள். அதனால், பாபிலோன் பிடிக்கப்பட்ட சமயத்தில் அந்நகரிலிருந்த அநேகர் மடிந்துபோனார்கள். எனவே சத்தியத்தில் நடப்பதுபோல நடிப்பது, உக்கிரமான 'பாபிலோனின் மது'வை நாம் காணக்கூடாமல் செய்து, வஞ்சிக்கக்கூடும்.

எந்தவிதமான பொய்த்தொழுகையும் நம்மிடம் காணப்படவில்லையென நாம் எவ்வாறு உறுதியாகச் சொல்லமுடியும்?

## “மகா பாபிலோன்”

**பாபிலோன்பற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்கின்றன? எரேமியா 51:6,7,53,57; சகரியா 2:7; வெளி 17:5,6; 18:2,3.**

வரலாற்றில் பொய்த்தொழுகையின் தலைநகரமாக பாபிலோன் இருந்து வந்துள்ளது; எனவே, கடைசிக்காலத்தில் தேசங்களை வஞ்சிக்கிற வல்லமைக்கு ஏற்ற ஓர் அடையாளமாக அது இருக்கிறது.

**வலுசர்ப்பத்தையும், சமுத்திரத்திலிருந்து எழும்பின மிருகத்தையும், சிவப்புநிற மிருகத்தையும் ஒப்பிடுங்கள். வெளி 12:3; 13:1–3; 17:3. என்னென்ன ஒற்றுமை-வேற்றுமைகளைக் காணமுடிகிறது?**

மூன்று மிருகங்களுக்குமே ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன; தானியேல் 7 சொல்கிற மிருகங்களுக்கும் சேர்த்து ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன. ஒவ்வொரு ராஜ்யமும் தனக்கு முன்னிருந்த ராஜ்யத்தைத் தோற்கடித்து ஆட்சிக்கு வந்தது. அதுபோல, சிவப்புநிற மிருகத்திடமும், அஞ்ஞான ரோம் ஆகிய வலுசர்ப்பத்தின் தன்மைகளும், போப்பு மார்க்கமான சமுத்திரமிருகத்தின் தன்மைகளும், பூமிமிருகத்தின் தன்மைகளும் காணப்பட்டன. வெளி 13:11-14. ‘தேவனுடைய எதிரிகளான மூன்று வல்லமைகளின் கூட்டணியாக’ இருந்தது. சிவப்புநிற மிருகம்பற்றி வெளி 17இல் கூடுதலாக ஒரு தகவல் உள்ளது. ஒரு ஸ்திரீ அதன்மேல் இருந்தாள். மத, அரசியல் வல்லமைகளின் தீய கூட்டணியை அது சுட்டிக்காட்டுகிறது. வெளி 12இல் சொல்லப்படும் நல்ல ஸ்திரீக்கும் முற்றிலும் எதிரானவளாக இந்த ஸ்திரீ இருக்கிறாள்.

| வெளிப்படுத்தல் 12 - **நல்ல ஸ்திரீ** | வெளிப்படுத்தல் 17 - **வேசியான ஸ்திரீ** |
|---|---|
| வானத்தில் இருந்தாள் | திரளான தண்ணீர்களின்மேல் இருந்தாள் |
| சூரியனை அணிந்திருந்தாள் | இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையணிந்திருந்தாள் |
| 12 நட்சத்திரங்களுள்ள கிரீடமிருந்தது | பொன், இரத்தினங்கள், முத்துக்களால் சிங்காரித்திருந்தாள் |
| வலுசர்ப்பம் தாக்கியது | வலுசர்ப்பம் ஆதரித்தது |
| மீதமானவர்களின் தாய் | வேசிகளின் தாய் |

‘பாபிலோன்’ வேசிகளின் தாயாக வேசிமார்க்கத்தைப் பெருக்கி வந்தது. தேவதுரோக தாய்ச்சபைக்கு அநேக தேவதுரோக குமாரத்திகள் இருக்கிறார்கள். தேவதுரோக கிறிஸ்தவ மார்க்கம் பரப்பின பொய்ப்போதகங்களுக்கும், செய்த அட்டூழியங்களுக்கும் தேவன் பொறுப்பாளி இல்லை. உண்மையான மக்களை சாத்தான் தாக்கினாலும், தேவன் அவர்களைப் பாதுகாத்து வருகிறார்.

சத்தியத்திலிருந்து பாபிலோன் விலகியதுபற்றி வெளி 14:8 ஏற்கனவே எச்சரித்திருக்கிறது. இந்நிலையின் இறுதி வஞ்சகம்தான் மிருகத்தின் முத்திரை. வெளி 14:9-11. இந்த எச்சரிப்பை மிகுந்த வல்லமையோடு சொல்லவேண்டும்; இன்னும் பாபிலோனில் இருக்கிறவர்கள் அவளைவிட்டு வெளியே வந்து, தேவனுடைய கடைசிக்கால மீதமான சபையோடு இணைந்துகொள்ள தேவன் தருகிற இறுதி அழைப்பு இதுதான். வெளி 18:1-4.

**வியாழன், ஜூன் 7**

## என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள்

தீர்க்கதரிசனங்களை கடைசிக்கால நிகழ்வுகளோடு சம்பந்தப்படுத்தி, உலக நிகழ்வு ஒவ்வொன்றையும் வேத அறிஞர்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள். உதாரணமாக, கடைசிக்கால நிகழ்வுகளில் அமெரிக்காவின் பங்கை எடுத்துக்கொள்வோம். 1851ஆம் ஆண்டிலேயே அட்வெண்ட்டிஸ்டுகள் சிலர், அமெரிக்காதான் இரண்டாவது மிருக வல்லமை என்று கூறினார்கள். வெளி 13:11-15. அச்சமயத்தில் அமெரிக்கா இருந்த நிலையை எடுத்துக்கொண்டால் இது குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பு. 1800களின் மத்தியில், அன்றைய பிரஷ்யா, பிரான்ஸ், ஆஸ்திரியா-ஹங்கேரி, இங்கிலாந்து போன்ற நாடுகள்தாம் உலக வல்லமைகளாக விளங்கிவந்தன. அந்தச் சமயத்தில் அமெரிக்காவிடம் அமைதிக்கால இராணுவ வீரர்களாக இருபதாயிரம்பேர் மட்டுமே இருந்தார்கள்; 1815இல் வாட்டர்லூ போரில் சண்டையிட்டுக்கொண்ட இராணுவ வீரர்களில் பத்தில் ஒரு பங்குதான் இது. 1814இல் அமெரிக்காவை பிரிட்டன் கைப்பற்றி, வாஷிங்டன் நகரைத் தீயிட்டுக் கொளுத்தியது. 1876 இல், செவ்விந்திய தலைவரான சிட்டிங் புல் என்பவர் தளபதி கஸ்டரின் ஏழாவது பிரிவு அமெரிக்க காலாட்படையைத் தோற்கடித்து, துவம்சம்செய்தார். எனவே, வருங்காலத்தில் ‘மிருகத்தின் முத்திரையை’ உலகத்தில் கட்டாயப்படுத்தும் ஒரு வல்லமையாக அமெரிக்காவை சில விளக்கவுரையாளர்கள் சுட்டிக்காட்டி வந்தாலும், அமெரிக்கா அந்நாட்டு பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்களோடு யுத்தம் செய்துவந்தது; பல யுத்தங்களில் பெரும்பாலும் வெற்றிபெறவும் இல்லை!

நாம் நம்புகிறவிதத்தில்தான் உலக நிகழ்வுகள் நிகழ்ந்து வருகின்றன. ஆனால், முடிவு வருவதற்குமுன் இன்னும் நிகழவேண்டிய சம்பவங்கள் உள்ளன. ‘மிருகத்தின் முத்திரையை’ தற்சமயம் எந்த வல்லமையும் கட்டாயப்படுத்தவில்லை. எனவே, மிருகத்தின் முத்திரைபற்றிப் பேசும்போது, இதை மறக்கக்கூடாது. இன்னும் வெளியரங்கமாகவேண்டிய சங்கதிகள் ஏராளம் உள்ளன.

**வெளி 18:1-4 என்ன சொல்கிறது? இதை இக்காலக்கட்டத்தில் நாம் நினைவில் வைத்திருப்பது ஏன் முக்கியமானது? உலகத்தில் நாம் செய்யவேண்டிய ஊழியப்பணிபற்றி இந்த வசனங்கள் என்ன சொல்கின்றன?**

அரசியல், ஒழுக்க, ஆன்மிக நிலை தரங்கெட்டுப் போகிற ஒரு காலத்தை இவ்வசனங்கள் காட்டுகின்றன. பொய்யான மதப்போதனைகள் அதிகமாகக் காணப்படும். ஆனாலும், மிகப் பெரிய நம்பிக்கையை அவ்வசனங்கள் தருகின்றன. ஏனெனில், வானத்திலிருந்து இறங்கிவருகிற தூதனுடைய மகிமையால் பூமி பிரகாசமாகிறது. தாங்கள் என்ன செய்யவேண்டுமென்று இன்னும் அறியாமல் இருக்கிற தேவபிள்ளைகள் பாபிலோனில் உண்டு; பாபிலோனைவிட்டு வெளியே வரும்படி அவர்களை அழைக்கிறார். எனவே, ஏற்கனவே பாபிலோனுக்கு வெளியே இருக்கிற தேவபிள்ளைகள், இன்னும் பாபிலோனுக்குள் இருக்கிறவர்களுக்காக முடிவுகாலம் மட்டும் பிரயாசப்படவேண்டும்.

இன்னும் பாபிலோனில் இருக்கும் சிலரை ‘என் ஜனங்களே’ என்று தேவன் அழைக்கிறார். அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்? மற்றவர்களை எடைபோடும்போது, இதை மனதில் வைத்திருப்பது ஏன் முக்கியமானது?

## மேலும் படிக்க:

தேவனுடைய பிரமாணத்தை தாக்குவதன்மூலம், அவருடைய அதிகாரத்தையும், ஆளுகையையும் சாத்தான் தாக்குகிறான். எனவே கடைசிக்கால நிகழ்வுகளின்போது ‘தேவனுடைய கற்பனைகளைக்’ கைக்கொள்வோரை சாத்தான் தாக்குவான். வெளி 12:17; 14:12. ஏனென்றால், அவர்கள்மட்டுமே பூமியிலுள்ள அவனுடைய பிரதிநிதிகளை வணங்காமல் இருப்பார்கள். ஆரம்பத்தில் பரலோகத்தில் தொடுத்த யுத்தத்தை பூமியிலும் தொடருவான்; பரலோகத்தில் தோற்கடிக்கப்பட்டதுபோல இங்கே பூமியிலும் தோற்கடிக்கப்படுவான். ‘பரலோகத்தில் மாபெரும் போராட்டத்தை ஆரம்பித்ததுமுதலே பிரமாணங்களை ஒழிக்கவேண்டும் என்பதே சாத்தானின் நோக்கமாக இருந்துவந்தது. இதை நிறைவேற்றவே, சிருஷ்டிகருக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்டான். பரலோகத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டாலும், அதே போராட்டத்தை பூமியிலும் தொடர்ந்தான். மனிதர்களை வஞ்சித்து, அதன்மூலம் அவர்கள் தேவ கற்பனையை மீறவேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடே செயல்பட்டான். கற்பனைகளில் ஏதாவது ஒன்றை ஒதுக்கும்படி செய்துவிட்டால், இறுதி விளைவு ஒன்றாகத்தான் இருக்கும். ஒருவன் ‘ஒன்றிலே தவறினால்’ அவன் எல்லா கற்பனைகளை யும் மீறினவனாகக் காணப்படுகிறான்; அவன் ‘எல்லாவற்றிலேயும் குற்றவாளியாயிருப்பான்.’ யாக்கோபு 2:10. – *EGW, GC, p 582.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *கடைசி நாட்களில் என்னவெல்லாம் நிகழுமென நாம் நினைக்கிறோமோ அதை எவ்வாறு உலக நிகழ்வுகள் நிரூபிக்கின்றன? இன்னும் எஞ்சியிருக்கும் நிகழ்வுகள் என்ன? வேதாகமத்திலும் எலன் ஒய்ட்டின் எழுத்துகளிலும் தெளிவாகச் சொல்லாத அடையாளங்கள் குறித்து பலர் தீவிரமாகப் பேசிவருகிறார்கள். அவற்றுக்கு நாள் குறிக்கவும் செய்கிறார்கள். அவற்றைத் துணிகரமாக முன்னுரைக்கவும் செய்கிறார்கள். இவற்றுக்கு நாம் எவ்வாறு எச்சரிப்புடன் நடந்துகொள்ளலாம்?*

2. *தொழுகைபற்றித் தியானியுங்கள். ஒன்றைத் தொழுதுகொள்வது என்றால் என்ன அர்த்தம்? நாம் யாரைத் தொழுகிறோமோ, அவரை எவ்வாறு தொழுதுகொள்கிறோம்?*

3. *பாபிலோனில் இன்னமும் தேவபிள்ளைகள் இருக்கிறார்கள் என்பதுபற்றித் தியானியுங்கள். ‘பாபிலோன்’ என்பது ஓர் அடையாளமே தவிர, உண்மையான பாபிலோன் அல்ல. அப்படியானால் ‘பாபிலோன்’ பற்றி என்ன புரிந்துகொண்டீர்கள்? பிறருடைய அரசியல், மத நம்பிக்கைகளைத் தாண்டி, அவர்களுக்கு நாம் சத்தியத்தைச் சொல்லவேண்டியதுபற்றி என்ன புரிந்துகொண்டீர்கள்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: **போதகர் சாத்ராக் சாமுவேல்,**

**டாக்டர் ஏ. ஜான்சன்**

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. **YOUTUBE** க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. **YOUTUBE** க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*